# கிழக்கு மாகாண இளங்கலைஞர் பாராட்டு – 2017

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவின் ஓர் அம்சமாக கலை இலக்கிய துறையில் சாதனை படைத்து வரும் இளங்கலைஞர்களைப் பாராட்டி விருது வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கலைகளை வளர்ப்பதற்காக பாடுபடுகின்ற இளைய தலைமுறை கலைஞர்களை ஊக்குவிப்பதற்கும் தம் திறமை மூலம் கிழக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்த இளங்கலைஞர்களை பாராட்டி அத்தகைய இளையோரை கௌரவிப்பதனூடாக மேலும் கலையில் ஈடுபாடும் வளர்ச்சியும் காண வேண்டும் என்ற நோக்கத்திலும் இப் பாராட்டு விருதினை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இளங்கலைஞர்கள் இலக்கிய கர்த்தாக்கள், துறைசார் வல்லுனர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

**இக் கௌரவிப்புக்காக கருத்தில் கொள்ளப்படும் விடயப்பரப்புகள்**

1. பாரம்பரிய ஆற்றுகை மற்றும் நுண்கலைகளின் வளர்ச்சிக்கான பங்களிப்பு
2. ஆக்க இலக்கிய துறைசார் கலைகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட உயர்மட்ட கௌரவம்
3. மாகாணமட்ட, தேசியமட்ட, சர்வதேச மட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தனிநபர் சாதனைகள்
4. ஏனையோருக்கு வழிகாட்டியாக அல்லது உசாத்துணையாக அமையக் கூடிய ஆய்வுகள், ஆவணப்படுத்தல்கள்.
5. சமூகவளர்ச்சி மற்றும் சமூக அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட மாகாண தேசிய செயற்றிட்டங்கள்
6. சமூகத்தினையும் இளந் தலைமுறையினரையும் கலையின் பால் ஈர்க்கக்கூடிய வகையிலான பங்களிப்புகளும் வழிகாட்டல் செயற்பாடுகளும்

**தெரிவு தொடர்பான நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி கிழக்கு மாகாணத்தை பிறப்பிடமாக கொண்டவராக இருத்தல் வேண்டும்
2. 2017.01.01 அன்று 40 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. தனி நபராகவே இப் போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும்

**போட்டிகளுக்கான பொது நிபந்தனைகள்**

1. போட்டி விதிமுறைகளிற்கு உட்படாத விண்ணப்பங்கள் நடுவர் தேர்விற்கு சமர்ப்பிக்கப்படாது, அதனை நிராகரிக்கும் உரிமை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு உண்டு.
2. விருதுக்காக சமர்ப்பிக்கப்படும் படைப்புகள், ஆதாரங்கள் தபால் மூலமோ அல்லது வேறு இயற்கை அனர்த்தங்களின் போதோ சேதமேற்படின் அவை தொடர்பாக பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பொறுப்பக் கூறமாட்டாது.
3. போட்டிகளில் பண்பாட்டலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்குபற்ற முடியாது
4. சமர்ப்பிக்கப்படும் படைப்புகள், சாதனைக் குறிப்பேடுகள் துறைசார் நடுவர் குழுவினால் பரிசீலிக்கப்படும்.
5. தெரிவு செய்யப்படும் இளங்கலைஞர் கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவின் போது கௌரவிக்கப்படுவார்.
6. இப்போட்டிகளிற்கு படைப்புகள் சமர்ப்பிப்பதே சகல போட்டி நிபந்தனைகளுக்கும் உடன்படுவதாகக் கருதப்படும்
7. நடுவர் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்,
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்